




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 241 13.04.2026 திங்கள்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 241 | Monday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(13-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-30
பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி இரவு 10.26 வரை
பிறகு துவாதசி
நட்சத்திரம்:
அவிட்டம் நண்பகல் 1.22
வரை பிறகு சதயம்.
யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி
எமகண்டம்
காலை 10.30-12.00மணி
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி
மாலை 3-4 மணி

மேஷம் ................கவனம்
ரிஷபம்......................பரிவு
மிதுனம் .....................வரவு
கடகம் ................. பாராட்டு
சிம்மம் ..................தெளிவு
கன்னி ............. ..மேன்மை
துலாம் ..................போட்டி
விருச்சிகம்............... நலம்
தனுசு......................பணிவு
மகரம் ....................... பரிசு
கும்பம்...................வெற்றி
மீனம்..................... ஆசை

# ஈரான் - அமெரிக்கா அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி!

## இது ஈரானுக்குத்தான் அதிக கெட்ட செய்தி: ஜே.டி.வான்ஸ்

**இஸ்லாமாபாத், ஏப்.13:**

ஈரான் - அமெரிக்கா அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாக அமெரிக்கதுணை அதிபர் ஜே.டி. வான்ஸ் (ஞாயிற்றுக்கிழமை ஏப்.12) தெரிவித்துள்ளார்.

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா இடையேயான போர் கடந்த பிப்.28 ஆம் தேதி தொடங்கியது. தாக்குதல்கள் தொடர்ந்த நிலையில் ஈரானுடன் இரண்டு வார கால போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புதன்கிழமை (ஏப்.8) அதிகாலையில் அறிவித்தார்.

இந்தப் போரை முழுமையாக நிறுத்த அமெரிக்கா-ஈரான் இடையே பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்து வரும் நிலையில் ஏப்ரல் 10 ஆம் தேதி ஈரான் மற்றும் அமெரிக்க குழுக்களை பாகிஸ்தான் வருமாறு அந்நாட்டு பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில் அமெரிக்கா வைத்த முன் நிபந்தனைகள் காரணமாக பேச்சுவார்த்தைதிட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை தொடங்காமல் சனிக்கிழமை (ஏப்.11) தாமதமாகத் தொடங்கியது.



இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தும் அமெரிக்க குழுவுக்கு அந்நாட்டு துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், ஈரான் குழுவுக்கு அந்நாட்டு நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமது பகேர் கலிபாஃப் ஆகியோர் தலைமை வகித்துள்ளனர்.

அமெரிக்க குழுவில் டிரம்ப்பின் மருமகன் ஜாரெட் குஷ்னர், மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கான தூதர் ஸ்டீவ் விட்காஃப் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். ஈரான் குழுவில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, தேசியப் பாதுகாப்பு கவுன்சில் செயலர் அலி அக்பர் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.


ஈரான் - அமெரிக்கா இடையே அமைதிப் பேச்சுவார்த்தை முடிந்த பிறகு அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் கூறுகையில், "நாங்கள் 21 மணிநேரம்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். ஈரானியக் குழுவுடன் பலமுறை கலந்துரையாடினோம். ஆனால் உடன்பாடு எட்டப்படவில்லை. இது அமெரிக்காவுக்கு ஒரு கெட்ட செய்தி என்பதை விட, ஈரானுக்குத்தான் அதிக கெட்ட செய்தியாகும். நாங்கள் பாகிஸ்தானிலிருந்து புறப்படுகிறோம்" எனத் தெரிவித்தார்.

# தி.மு.க. ஆட்சியின் மோசமான நிர்வாகம்: பிரதமர் மோடி விமர்சனம்

**புதுடெல்லி, ஏப்.13:**

தமிழக பா.ஜ.க. செயல்வீரர்களை நினைத்து மிகவும் பெருமைப்படுவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-



தி.மு.க.வின் மோசமான நிர்வாகத்தை அம்பலப்படுத்தி, மாநில வளர்ச்சிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தொலைநோக்குப் பார்வையை விரிவாக எடுத்துரைத்த நமது தமிழக பா.ஜ.க. செயல்வீரர்களை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.


13-ம் தேதியன்று மாலை நடைபெறும் 'எனது வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி கலந்துரையாடல்' நிகழ்ச்சியின் போது, கடினமாக உழைக்கும் நமது செயல்வீரர்களுடன் நான் உரையாடவிருக்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பாஜக பூத் கமிட்டி கூட்டம் இன்று (திங்கள் கிழமை) மாலை நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு உரையாற்ற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அம்பேத்கருக்காக ஓடுங்கள், அரசியலமைப்புக்காக ஓடுங்கள்

## மாரத்தானை தொடக்கி வைத்த ராகுல் காந்தி!




**புதுடெல்லி, ஏப்.13:**

டில்லியில் "அம்பேத்கருக்காக ஓடுங்கள், அரசியலமைப்புக்காக ஓடுங்கள்" என்ற பெயரிலான மாரத்தானை காங்கிரஸ் எம்.பி.யும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி கொடியசைத்து ஞாயிற்றுக்கிழமை (ஏப்.12) தொடக்கி வைத்தார்.

காங்கிரஸ் சார்பில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பிறந்தநாளையொட்டி, நடத்தப்படும் இந்த மாரத்தான் ஓட்டம், சமத்துவம் மற்றும் சமூக நீதியை வலியுறுத்தி மாண்டி ஹவுஸில் இருந்து தொடங்குகிறது

இந்நிகழ்வில் பேசிய ராகுல் காந்தி, ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக கொள்கைகளுடன் தொடர்புடையவர்கள் அம்பேத்கரையும் அரசியலமைப்பையும் பலவீனப்படுத்த முயல்கின்றனர் என்று குற்றம் சாட்டியதோடு, அம்பேத்கரின் மையக் கருத்து அனைத்து குடிமக்களுக்குமான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் வலியுறுத்தினார்.

மேலும் பேசிய அவர், "அம்பேத்கரின் மையக்கருத்தாக அரசியலைப்புச்சட்டம்தான் இருந்தது. ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக கொள்கைகளுடன் இருப்பவர்கள் அம்பேத்கரின் அரசியலமைப்பை சீர்குலைக்கின்றனர்.

நாட்டில் அனைவரும் சமத்துவமாக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் என்ன செய்தாலும், அதாவது அம்பேத்கர் சிலைக்கு முன்னால் கைக்கூப்பி நிற்பதுகூட அரசியலமைப்பை அழிக்கும் ஒரு முயற்சியே" எனத் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வில் காங்கிரஸ் தலைவரும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனுமான முகமது அசாருதீன் மற்றும் ராஜஸ்தான் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திக்காராம் ஜூலி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தேர்தல் பிரசாரம்: தமிழகம் வரும் நிதின் நபின்!

**சென்னை, ஏப்.13:**

தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதற்காக பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், இரண்டு நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. இதனையொட்டி பல்வேறு அரசியல் கட்சித் தலைவரும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். தமிழகம் வருகைதரும் நிதின் நபின் ஏப். 12, 13 ஆகிய இரண்டு நாட்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்கிறார்.

இது தொடர்பாக பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், "நாளை முதல் இரண்டு நாள் பயணமாக நான் தமிழகம் வரவுள்ளேன். இந்தப் பயணத்தின் போது, ராமநாதபுரம் மற்றும் அறந்தாங்கியில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்களில் உரையாற்றுகிறேன். மேலும் சாத்தூர், மதுரை தெற்கு மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய தொகுதிகளில் நடைபெறவுள்ள ரோட் ஷோக்களிலும் பங்கேற்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் நரேந்திர மோடி வரும் ஏப். 15- ஆம் தேதி கன்னியாகுமரி வரவுள்ளார். அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்யவுள்ளார்.

அதேபோல, பாஜக தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் பலரும் பிரசாரத்துக்காக தமிழகம் வரவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையேதான் போட்டியா?: முதல்வர் ஸ்டாலின் பதில்!

**பரமக்குடி, ஏப்.13:**

திமுக - தவெக இடையே போட்டி நிலவுவதாக, விஜய் கூறுவது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலளித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடும் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக சனிக்கிழமை (ஏப். 11) இரவு பரமக்குடிக்கு வந்தார் முதல்வர் ஸ்டாலின்.

நேற்று (12.4.2026) காலை பரமக்குடியில் கட்சியின் முக்கிய நிர்வாகிகளுடன் நடைப்பயிற்சி மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், அப்பகுதி மக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார்.




இதனிடையே செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் கசிந்தது தொடர்பான கேள்விக்கு, "ஜனநாயகன் பற்றி பதில் கூற வேண்டிய அவசியமில்லை" என்றார். ஜனநாயகன் படம் குறித்து திமுக மீது தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனா வைத்த விமர்சனம் குறித்த கேள்விக்கு, "ஆதவ் அர்ஜுனா செய்திகளை நான் படிப்பதில்லை" என்றார்.

தவெகவுக்கும் திமுகவுக்கும்தான் போட்டி என்று தவெக தலைவர் சொல்கிறாரே என்ற கேள்விக்குப் பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "அதற்குப் பதில் தெரிவிக்க நான் தயாராகயில்லை என்றார்.

எப்போதும் திமுகவிற்கும் அதிமுகவிற்கும் தானே போட்டி, தமிழ்நாட்டிற்கும் தில்லிக்கும்தான் போட்டி என்று சொல்ல காரணம் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், அதிமுகவின் முகமூடியை போட்டுக்கொண்டுதானே பாஜக உள்ளே வருகிறது; அதனால், அதுதான் உண்மை" என்றார்.

மேலும் அவர் பேசுகையில், " எடப்பாடி பழனிசாமி தோல்வியின் விரக்திக்கு சென்றுவிட்டார். அந்த விரக்தியில் பேசிக்கொண்டு இருக்கிறார். நடைப்பயிற்சி செல்வது என்னுடைய வழக்கம். மக்கள் உற்சாகமான வரவேற்பு அளிக்கின்றனர். மக்கள் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்" என்றார்

# ஜனநாயகன் படத்தை லீக் செய்த வெப்சைட்டுகள் முடக்கம்

**சென்னை, ஏப்.13:**

விஜய்யின் கடைசிப் படமான 'ஜனநாயகன்' பொங்கலுக்கு ரிலீஸாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்சார் பிரச்சினை காரணமாக நீதிமன்றம் வரை சென்று தள்ளிப்போனது. தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவடைந்தவுடன் மே இரண்டாவது வாரத்தில் ஜனநாயகன் படத்தை வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனிடையே தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவரும் தவெக தலைவர் விஜய், தனது 'ஜனநாயகன்' படத்திற்கு கூட்டு சேர்ந்து பிரச்சினை ஏற்படுத்துகிறார்கள் என குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த சூழலில், கடந்த 9-ந்தேதி மாலை ஜனநாயகன் திரைப்படத்தின் சில காட்சிகள் இணையத்தில் சட்டவிரோதமாக மர்ம நபர்களால் வெளியிடப்பட்ட நிலையில்




நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிநேரம் கொண்ட முழு படமும் இணையத்தில் வெளியானது. இதனால் படத் தயாரிப்பு நிறுவனமும், படக்குழுவினரும், ரசிகர்களும் பேரதிர்ச்சிக்கு உள்ளாகினர். ஜனநாயகன் படம் இணையத்தில் வெளியானதற்கு திரையுலக பிரபலங்கள் மட்டுமின்றி, அரசியல் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஜனநாயகன் காட்சிகளை பகிர்ந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, படத்தை சட்டவிரோதமாக இணையத்தில் வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என படக்குழுவினர் சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்துள்ளனர். இந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்துள்ள சைபர் கிரைம் போலீசார், படத்தை இணையத்தில் வெளியிட்டது யார்? என்பது குறித்த முதற்கட்ட விசாரணையை தொடங்கினர். இந்த நிலையில், ஜனநாயகன் படத்தை லீக் செய்த வெப்சைட்டுகளை முடக்கி தமிழக சைபர் கிரைம் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். படத்தை பதிவிட்டுள்ள வெப்சைட்டுகள், டெலிகிராம் பக்கங்கள் முடக்கப்பட்டுள்ளன. மேலும், படத்தை பகிர்ந்த சமூக வலைதள பக்கங்களும் முடக்கப்பட்டுள்ளன. படத்தை முதலில் வெளியிட்டது யார்? என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.




## திருப்பதி கோவிலில் கடந்த ஆண்டு ரூ.1,420 கோடி உண்டியல் வசூல்



**திருப்பதி, ஏப்.13:** திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நாடு முழுவதிலும் இருந்து தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் நேர்த்திக்கடனாக உண்டியலில் தங்கம், வெள்ளி, வைரம், பணம், வெளிநாட்டு கரன்சி காணிக்கையாக செலுத்துகின்றனர்.

கடந்த 2023-ம் ஆண்டு முதல் 25-ம் ஆண்டு வரை ஒரு நாளைக்கு சராசரியாக 70 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்து வந்தனர். தற்போது ஒரு நாளைக்கு சராசரியாக 73 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

கடந்த 6 மாதங்களாக ஒவ்வொரு மாதமும் சராசரியாக ரூ.120 கோடி உண்டியல் காணிக்கையாக வசூலானது. அதன்படி கடந்த ஆண்டு ரூ.1,420 கோடி உண்டியல் காணிக்கை வசூலாகி உள்ளது. 13.95 கோடி லட்டுகள் விற்பனையாகி உள்ளது.

திருப்பதியில் நேற்று 81,288 பேர் தரிசனம் செய்தனர். 34,892 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.43 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது.

நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 15 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

## திமுக கூட்டணிக்கு ஆதரவு - ஸ்டாலினை நேரில் சந்தித்த பல்வேறு சங்க நிர்வாகிகள்



**பரமக்குடி, ஏப்.13:** ராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பினர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தினர் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவரும், முதல்வருமான ஸ்டாலின், பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார். இந்த பயணத்தின் ஒரு பகுதியாக பரமக்குடிக்கு அவர் சென்றுள்ளார்.

அங்கு, ராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பினர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், தொழில் மற்றும் வர்த்தக சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள் என 50-க்கும் மேற்பட்ட சங்கங்களின் நிர்வாகிகள் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதற்காகவும், திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காகவும் நன்றி தெரிவித்து, திமுக கூட்டணிக்கு சட்டமன்ற பொதுத்தேர்தலில் தங்கள் ஆதரவினை தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர்.

## பல்லாவரம்: பம்பரமாய் சுழன்று வேட்பாளர்கள் வாக்கு சேகரிப்பு









**பல்லாவரம், ஏப்.13:** ஐஜேகே -அதிமுக அரசின் சாதனைகளை முன்னிறுத்தல்: அதிமுக கூட்டணியில் போட்டியிடும் ஐஜேகே வேட் பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன், தனது பிரச்சாரத் தில், கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் 100 யூனிட் இலவச மின்சாரம், தாலிக்குத் தங்கம், மானிய விலையில் ஸ்கூட்டர் உள்ளிட்ட திட்டங்களைக் கூறி வாக்கு சேகரித்து வருகிறார். மேலும் அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களை கட்டுப்படுத்த தமிழக அரசால் இயலவில்லை என குற்றம்சாட்டி பிரச்சாரம் செய்து வருகிறார்.

**நாதக**

பெண்களுக்கு முக்கியத்துவம்: நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் மருத்துவர் ஆர். கார்த்திகேயன். "நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் மட்டும் சரிபாதி பெண்கள் அல்ல, கட்சி கட்டமைப்பிலும் சமமான வாய்ப்பை வழங்குகின்றது. பெண்களுக்கென தனி சட்டப்பேரவை.பாராளுமன்றத் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். அந்த வகையில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்" என பிரச்சாரம் செய்து வருகிறார்.

**தவெக**

பெண்கள் பாதுகாப்பு, இளைஞர் வேலை வாய்ப்பு: தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் ஜே.காமாட்சி. 'பெண்களின் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு.

அடிப்படை பிரச்சினைகளுக்கு தவெக முக்கியத்துவம் அளிக்கும். குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500, திருமணத்துக்கு பட்டுப் புடவையுடன். ஒரு பவுன் தங்கம் உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளைக் கூறி வாக்கு சேகரித்து வருகிறார். தேர்தல் நெருங்க நெருங்க பல்லாவரம் தொகுதியில் வேட்பாளர்கள் பம்பரமாய் சுற்றிச் சுழன்று வாக்கு சேகரித்து வருகின்றனர்.

## மக்களுக்கும் எடப்பாடி துரோகம் செஞ்சுட கூடாதுன்னு தான் அரசியலுக்கு வந்தேன்

### சசிகலா ஆவேசம்




**தென்காசி, ஏப்.13:** தென்காசி சட்டமன்ற தொகுதி அஇபுதமமுக வேட்பாளரை ஆதரித்து சுரண்டையில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் சசிகலா நேற்று பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

எனக்கு செய்த துரோகத்தை எடப்பாடி பழனிசாமி தமிழக மக்களுக்கு செய்து விடக்கூடாது என்பதற்காகவே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

காவல்துறையினர் தனது கடமையை சரியாக செய்ய வேண்டும். தமிழகத்தின் கடன் சுமையை குறைக்கவும், வெளி மாநிலத்திற்கு செல்லும் கனிம வளங்களை தடுத்து நிறுத்தவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். என்றார். தொடர்ந்து கழுநீர் குளத்தில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## அமைச்சர் அன்பில் மகேஷ் வாகனத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை



**திருச்சி, ஏப்.13:** திருவெறும்பூர் தொகுதி வேட்பாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் வாகனத்தில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 பேரவைத் தொகுதிகளுக்கும் தேர்தல் பறக்கும் படையினர் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இன்று காலை தேர்தல் பிரசாரத்திற்காக கொட்டப்பட்டு - பொன்மலை சாலையில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, தேர்தல் பறக்கும் படையினர் அமைச்சரின் வாகனத்தை மறித்து சோதனையில் ஈடுபட்டனர். பறக்கும் படையினரின் சோதனைக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முழு ஒத்துழைப்பு கொடுத்தார்.

சோதனையில் பணம் மற்றும் பரிசுப் பொருள் எதுவும் இல்லாததால் அமைச்சர் அன்பில் மகேஸ் வாகனத்தை செல்ல தேர்தல் பறக்கும் படையினர் அனுமதித்தனர். இதையடுத்து அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

## மூன்றாவது குழந்தையும் பெண் என சந்தேகம்: கர்ப்பிணி மனைவி, 2 மகள்களை கொன்ற கணவன்



**ஹனுமகொண்டா, ஏப்.13:** தெலங்கானா மாநிலம் ஹனுமகொண்டா மாவட்டம் புன்னேலா கிராமத்தைச் சேர்ந்த முகமது அசாருதீன் (29), தனது மனைவி ஃபர்ஹத் (26) மற்றும் மகள்கள் உமேரா (8), ஆயிஷா (6) ஆகியோரை ஏப்ரல் 1 அன்று இரவு நீச்சல் குளத்தில் தள்ளி கொலை செய்துள்ளார்.

கொலையைச் செய்வதற்கு முன்னதாக நீச்சல் குளத்தில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை அணைத்துவிட்டு, மின்சாரத்தையும் துண்டித்துள்ளார். பின்னர் இது தற்செயலாக நடந்த விபத்து என நாடகமாடியுள்ளார்.

மறுநாள் காலை சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், உறவினர்கள் மற்றும் உள்ளூர் மக்களிடையே பெரும் சோகத்தையும், மேலும் பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனைத்தொடர்ந்து தம்பதியினர் இருவருக்கும் அடிக்கடி வரும் சண்டைகளை சுட்டிக்காட்டி போலீசாரிடம் குடும்பத்தினர் பல்வேறு கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

பின்னர் போலீசார் விசாரணையில் ஏற்கனவே இரண்டு பெண் குழந்தைகள் இருந்த நிலையில், தற்போது கர்ப்பமாக இருந்த மனைவிக்கும் பெண் குழந்தை பிறக்கும் எனச் சந்தேகித்து இந்தக் கொடூரத்தை நிகழ்த்தியது தெரியவந்தது.

இதற்கு முன்னதாக தனது மனைவிக்கு இரண்டு முறை சட்டவிரோதமாகக் கருக்கலைப்பு செய்ய அசாருதீன் கட்டாயப்படுத்தியுள்ளார். மேலும் ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கும் நோக்கத்தில், வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்ளவும் அவர் திட்டமிட்டிருந்ததாகக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## "பாஜக 'புல்டோசரை' தமிழக எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம்"




### பிருந்தா காரத் பேச்சு

**திருவாரூர், ஏப்.13:** அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டு பாஜக புல்டோசர் வருவதை தமிழகத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிருந்தா காரத் தெரிவித்துள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் க.மாரிமுத்துவுக்கு ஆதரவாக நேற்று இரவு நடைபெற்ற பொதுகூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிருந்தா காரத், "இடதுசாரிக் கட்சிகள் போட்டியிடும் 10 தொகுதிகள் எங்களிடம் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு ஆற்றியுள்ள பணிகளின் அடிப்படையில், நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

எங்கள் கூட்டணி மிகவும் வலிமையானது. சந்தேகத்துக்கிடமின்றி இக்கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். அதிமுக - பாஜக கூட்டணி முற்றிலும் சந்தர்ப்பவாதக் கூட்டணி. எவ்விதக் கொள்கை அடிப்படையும் இன்றி அமைந்துள்ளது. அதிகார வேட்கையைத் தவிர, இவ்விரு கட்சிகளுக்கும் இடையே பொதுவான அம்சம் வேறு என்ன இருக்க முடியும்? பாஜகவின் அடிப்படைச் சித்தாந்தங்களுக்கு முற்றிலும் முரணான கருத்துக்களைக் கூட, அதிமுகவினர் அதிகாரத்துக்காக பேசி வருகின்றனர்.

நாடு முழுவதும் இந்திய அரசியலமைப்பைத் தனது 'புல்டோசர்' கொண்டு நசுக்கி வருகிறது பாஜக. துரதிருஷ்டவசமாகவும், வன்மையாகக் கண்டிக்கத்தக்க வகையிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிமுக கட்சியானது இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்துக்கும் எதிராகச்செயல்பட்டுக்கொண்டு பாஜக இங்கு காலூன்றுவதற்கு வழிவகை செய்து வருகிறது.

இந்த 'புல்டோசர்' அணுகுமுறை இந்தியாவையே சீரழித்து வருகிறது. எனவே, இடதுசாரிக் கட்சிகளாகிய நாங்கள் திமுகவுடன் இணைந்து செயல்பட்டு, இந்த அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டுள்ள பாஜக 'புல்டோசர்' தமிழ்நாட்டுக்குள் வருவதை மாநிலத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்படுவதை உறுதி செய்வோம்.

மேலும், திமுக தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியை முன்னெடுப்பதை உறுதி செய்வோம்" என தெரிவித்தார்.

## செங்கோட்டையன் ஆதரவாளர்கள் தவெகவில் இருந்து விலகி மீண்டும் அதிமுகவில் இணைந்தனர்!



செங்கோட்டையன் ஆதரவாளர்கள் தவெகவில் இருந்து விலகி மீண்டும் அதிமுகவில் இணைந்தனர். அந்தியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 500க்கும் மேற்பட்டோர் தவெகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தனர். முன்னாள் அமைச்சர் ஏ.கே.செல்வராஜ் முன்னிலையில் செங்கோட்டையன் ஆதரவாளர்கள் அதிமுகவில் இணைந்தனர்.

## "தவெக ஆட்சியில் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்" கன்னியாகுமரியில் விஜய் வாக்குறுதி



**கன்னியாகுமரி., ஏப்.13:** 'தவெக ஆட்சியில் நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல் ஏஐ தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக ஆட்சியில் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்' என தவெக தலைவர் விஜய் கூறினார்.

கன்னியாகுமரியில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய விஜய், "என் நெஞ்சில் குடியிருக்கும் கன்னியாகுமரி, காரைக்குடி மக்களுக்கு வணக்கம். அன்று காரைக்குடியில் என்னால் பேச முடியாமல் போனது. இப்போது தவெக ஆட்சியின் சில திட்டங்களை அறிவிக்கிறேன். தவெக அரசு அமைந்தால், நம் ஆட்சியில் லஞ்சம் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் நலத்திட்டம் போய் சேரும். அதற்காக ஆதார் அட்டை போல தமிழகத்தில் ஒரு அடையாள அட்டை உருவாக்கப்படும். ஏஐ தரவுடன், லஞ்சம் இல்லாமல் நலத்திட்டங்கள் இந்த அட்டை மூலம் வழங்கப்படும். இதற்கு விண்ணப்பிக்க தேவையில்லை.

இப்போது அரசு அலுவலகங்களில் நமக்கு ஒரு வேலை ஆக வேண்டுமானால், பல்வேறு இழுத்தடிப்புகள் செய்கிறார்கள். இதற்கு காரணம் லஞ்சம் தான். இவ்வாறு வாங்கப்படும் லஞ்சம் அதிகாரிக்கு மட்டுமின்றி, அமைச்சருக்கும் செல்கிறது.

அதேபோல, தவெக ஆட்சியில் தமிழ்நாடு சேவை உறுதி திட்டம் உருவாக்கப்படும். ஆப் மூலமாக ஓட்டுநர் உரிமம் உள்ளிட்டவற்றை இடைத்தரகர் இல்லாமல், லஞ்சம் இல்லாமல் பெறலாம். பட்ஜெட்டை ஒரு ஆவணமாக மட்டும் நமக்குத் தெரியும். அந்த நிதி எங்கே செல்கிறது என நமக்கு தெரியாது. அது சிதம்பர ரகசியம் போல ஸ்டாலின் சார் ரகசியமாக உள்ளது.

தவெக ஆட்சியில், இணைய தளம் மூலமாக அரசின் திட்டங்களுக்கு மக்கள் ஆலோசனை வழங்கலாம், பட்ஜெட்டை கண்காணிக்கலாம். நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல் ஏஐ தொழில்நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக அரசின் கீழ் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்.

தமிழகத்தில் நிதி இறையாண்மை கொண்ட மாநிலமாக மாற்றப்படும். நம் மாநிலத்தின் கடன் 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது, இதனை மாற்ற வேண்டும்.

இதுபோன்ற ஆட்சி நமக்கு வேண்டும். இதுவரை நம்மை ஏமாற்றிய அனுபவசாலிகளின் ஆட்சி போதும்' எனத் தெரிவித்தார்.

## சைதாப்பேட்டை: பிச்சாரத்தில் தீவிரம் காட்டும் கட்சிகள்









**சென்னை, ஏப்.13:** **அமமுக :** அமமுக மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படும்: அமமுக வேட்பாளர் ஜி.செந்தமிழன், ஏற்கெனவே இந்த தொகுதியில் வெற்றி பெற்று அமைச்சராக இருந்துள்ளார். ஊழல், போதைப்பொருள் புழக்கம், மின் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் உயர்வு உள்ளிட்டவற்றை விளக்கி பிரச்சாரம் செய்கிறார். மேலும், மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படும் என்று கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

**நாதக :** அடிப்படை தேவைகளை முன்வைத்தல்: நாதக வேட்பாளர் எஸ்.ஜி. ஸ்ரீவித்யா, மக்களின் அடிப் படை தேவைகளை நிறைவேற்றுவதை முன்னிறுத்தி தொண்டர்கள் சூழ வீதி வீதியாக வாக்கு சேகரிப்பில் ஈடு பட்டு வருகிறார். தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாக்குறுதிகளை எடுத்துக்கூறி. மாற்றத்துக்கான எளிய மக்களின் அரசியல் புரட்சி ஏற்பட தனக்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்துவருகிறார்.


**தவெக:** மக்களின் வாழ்க்கைத்தரம் மேம் படுத்தப்படும்: தவெக வேட்பாளரான எம். அருள் பிரகாசம், தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். தவெக ஆட்சி அமைந்தவுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஊழல் இல்லாத ஆட்சியாக இருக்கும் என்று உறுதி அளித்து வருகிறார். தேர்தல் நெருங்குவதால் சைதாப்பேட்டை தொகுதியில் கட்சிகளின் பிரச்சாரமும் தீவிரம் அடைந்து வருகிறது.


























# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுப வரும் அனுகவும். 8668107106


















# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

**7540003588**






# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

**8248951872**

# கவிதை அரங்கம்!





நீ என் பாதி அல்ல,
நீதான் என் முழுமை என
உணர்ந்தேன்.


உன் மகிழ்ச்சிக்காக
என் உலகத்தையே
விட்டுக்கொடுக்கத் தயார்.

நாம் பேசாத
வார்த்தைகளில் தான்,
அதிகப்படியான காதல்
புதைந்து கிடக்கிறது.

கடலில் சேரும் நதியைப்
போல, உன்னோடு
சங்கமிப்பதே என்
லட்சியம்.

என் நாட்குறிப்பின்
ஒவ்வொரு பக்கத்திலும்,
உன் பெயர் மட்டுமே
நிரம்பி இருக்கிறது.

## வாழ்க்கை தத்துவம்...



முதல் காதலைக்
கூட மற முதுகில்
குத்தியவர்களை
மறவாதே

அகந்தை முன்னே
சென்றால் அவமானம்
பின்தொடரும்
என்பதை மறவாதே

காரணம் இல்லாமல்
கவலை கொள்ளாதே
காரணம் இருந்தாலும்
கலக்கம் கொள்ளாதே
எதுவும் கடந்து போகும்

# மனசாட்சி புரோக்கர்!




அந்தப் பகுதியில் 'புரோக்கர் பொன்னய்யா' என்றால் தெரியாதவர்களே இல்லை. நரைத்த முடி, கக்கத்தில் ஒரு டைரி, எப்போதும் ஒரு பழைய சைக்கிள் - இதுதான் அவர் அடையாளம். செருப்பு தேய ஊர் முழுக்க நடப்பார். "கல்லுக்கும் மண்ணுக்கும் உயிர் கொடுப்பவர்" என்று அவரைச் சொல்வார்கள். ஆனால், பொன்னய்யாவுக்கு ஒரு கெட்ட பெயர் உண்டு; அவர் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்', கமிஷன் விஷயத்தில் கறாராக இருப்பார் என்று பேசிக்கொள்வார்கள்.

ஒரு நாள், ஒரு இளம் தம்பதி பொன்னய்யாவைத் தேடி வந்தனர். "ஐயா, எங்ககிட்ட இருக்கிற சேமிப்பு இவ்வளவுதான். இதுல ஒரு சின்ன வீடு கிடைக்குமா? வாடகை கொடுத்துக் கொடுத்து அலுத்துப் போச்சு," என்றனர்.

வியாபாரத் தந்திரம்? பொன்னய்யா தன் டைரியைப் புரட்டினார். "இருக்கு... மெயின் ரோட்ல ஒரு அருமையான வீடு இருக்கு. ஆனா பார்ட்டி கொஞ்சம் அவசரமா விக்கிறாங்க. உடனே அட்வான்ஸ் கொடுத்தா முடிச்சிடலாம்," என்றார்.

அந்தத் தம்பதிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இடத்தை நேரில் பார்த்தனர். வாஸ்து, வசதி எல்லாம் பிரமாதம். வீட்டின் உரிமையாளர், "தம்பி, எனக்குப் பண நெருக்கடி, அதான் கம்மியா தர்றேன். நாளைக்கே ரிஜிஸ்டர் பண்ணிடலாம்," என்றார். தம்பதியினர் தங்கள் வாழ்நாள் சேமிப்பை எடுத்து பொன்னய்யாவிடம் கொடுக்கத் தயாராகினர்.

திருப்பம் தந்த பொன்னய்யா

மறுநாள் காலை, ரிஜிஸ்டர் ஆபீஸிற்குப் போகும் முன் பொன்னய்யா அந்தத் தம்பதியைத் தனியாக அழைத்தார். "தம்பி, இந்த வீடு வேண்டாம். அட்வான்ஸ் கொடுக்காதீங்க," என்றார் ரகசியமாக.

அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். "ஏன் ஐயா? நேத்து நீங்கதானே நல்ல இடம்னு சொன்னீங்க?"

பொன்னய்யா சொன்னார், "நேத்து வரைக்கும் அது நல்ல இடம்தான். ஆனா இன்னைக்குக் காலையில விசாரிச்சேன், அந்த வீட்டுக்கு மேல ஒரு வில்லங்கம் இருக்கு. கோர்ட்ல கேஸ் ஓடிட்டு இருக்கு. விக்கிறவர் அதை மறைச்சு உங்களை ஏமாத்தப் பார்க்கிறார். எனக்கு வர்ற கமிஷன் முக்கியமில்லை தம்பி, உங்களோட கஷ்டப்பட்டுச் சேர்த்த காசு வீணாகக் கூடாது," என்றார் உறுதியாக.

உண்மையான தரகர்

வீட்டு உரிமையாளர் கோபத்தில் பொன்னய்யாவைத் திட்டினார். "உனக்கு வர்ற கமிஷனை நானே தர்றேன்னு சொன்னேனே, ஏன் கெடுக்கிற?" என்று கத்தினார்.

பொன்னய்யா அமைதியாகச் சிரித்தார். "மண்ணை விக்கலாம் சார், ஆனா மனசாட்சியை விக்கக் கூடாது. இவங்க காசுல எனக்கு ஒரு ரூபா கூட வேண்டாம்," என்று சொல்லிவிட்டு, அடுத்த வாரம் அதே தம்பதிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாத ஒரு நல்ல வீட்டைத் தேடிப் பிடித்துக் கொடுத்தார்.

அன்று முதல் ஊர் மக்கள் அவரை 'புரோக்கர் பொன்னய்யா' என்று கூப்பிடாமல், 'நேர்மை பொன்னய்யா' என்று அழைக்கத் தொடங்கினர்.

**வெ நாராயணன்**
லால்குடி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*செந்தில்: அண்ணே, இந்த உலகத்துல ரொம்ப கஷ்டமான விஷயம் எதுண்ணே?*

*கவுண்டமணி: ஒருத்தன் பொய் சொல்லும்போது, அது பொய்ன்னு தெரிஞ்சும் நம்மால ஒன்னும் பண்ண முடியாம "அப்படியா?"ன்னு கேட்டுட்டு இருக்கிறதுதான்டா ரொம்ப கஷ்டம்!*



# தினம் ஒரு சமையல்



## ஸ்பைஸி க்ரீன் பீஸ் பிரியாணி

**தேவையான பொருட்கள்:**

1கப்ப.பட்டாணி
2 கப்வெண் புழுங்கலரிசி
1பெரிய வெங்காயம்
2மீடியம் சைஸ் தக்காளி
2கீறிய ப.மிளகாய்
1 துண்டுஇஞ்சி
6 பல்பூண்டு
1 டீ ஸ்பூன்ம.தூள்
1-1/2 ஸ்பூன்தனி மி.தூள்
1டீ ஸ்பூன்கரம் மசாலா தூள்
சிறு துண்டுபட்டை
4கிராம்பு
1ஏலக்காய்
1 டீ ஸ்பூன்சோம்பு
1அன்னாசி பூ
2 சிறியபட்டர் பாக்கெட்
2 ஸ்பூன்எண்ணெய்
3 1/2 டம்ளர்தண்ணீர்
ருசிக்குஉப்பு
1 ஆர்க்குகறிவேப்பிலை



**செய்முறை:**

தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும்.வெங்காயத்தை மெல்லியதாக நீளவாக்கில் நறுக்கவும். தக்காளியை பொடியாக நறுக்கவும். ப.மிளகாயை கீறிக் கொள்ளவும்.

அரிசியை களைந்து தேவையான தண்ணீர் விட்டு 10 நிமிடம் ஊற வைக்கவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து கடாயில் எண்ணெய், நெய் விட்டு காய்ந்ததும், பட்டை, கிராம்பு, ஏலக்காய், அன்னாசி பூ, சோம்பு சேர்த்து நன்கு வறுத்ததும், வெங்காயம், ப.மிளகாய், ம.தூள், உப்பு சேர்த்து நன்கு வதக்கவும்.

வெங்காயம் வதங்கியதும், தக்காளி, இஞ்சி பூண்டு விழுதை சேர்த்து நன்கு வதக்கவும்.

அடுத்து, பட்டாணி, மிளகாய் தூளை சேர்த்து பட்டாணி வெந்ததும், ஊறின அரிசியை வடித்து விட்டு சேர்த்து நன்கு பிரட்டிக் கொள்ளவும்.


பிறகு 3 1/2 டம்ளர் தண்ணீர் விட்டு கடாயை மூடி, 10 நிமிடம் வேகவிடவும்.

உதிரியாக அரிசி வெந்ததும், அடுப்பை நிறுத்தி விட்டு, மேலே பட்டர், கறிவேப்பிலை போட்டு இறக்கவும்.

பிறகு பௌலுக்கு மாற்றவும்.

இப்போது, சுவையான, சுலபமான,*ஸ்பைஸி க்ரீன் பீஸ் பிரியாணி* தயார்.செய்து, பார்த்து, ருசித்து, என்ஜாய் செய்யவும்.

## அம்மான் பச்சரிசி பயன்கள்



அம்மான் பச்சரிசி இலை எப்படி இருக்கும்:

இந்த அம்மான் பச்சரிசி இலை கீழ் படத்தில் உள்ளது போன்று தான் இருக்கும்.

அம்மான் பச்சரிசி இலை மருத்துவம்

சிலருக்கு முகத்தில் மருக்கள் ஏற்படும். இத்தகைய மருக்கள் முகத்தில் வந்தால் அவர்களது சரும அழகையே கெடுத்துவிடும். இத்தகைய மருக்களை முகத்தில் இருந்து அகற்றுவதற்கு பலர் பலவகையான சிகிச்சை முறைகளை மேற்கொள்கின்றன இருப்பினும் அந்த மருக்கள் முகத்தில் இருந்து உடனடியாக மறைந்துவிடுவதில்லை. இந்த பிரச்சனைக்கு மிக சிறந்த மருந்தாக அம்மான் பச்சரிசி விளங்குகிறது. அம்மான் பச்சரிசி செடியை உடைத்தால் அதில் இருந்து ஒருவகையான பால் வரும் அந்த பாலை முகத்தில் உள்ள மருக்கள் மீது தடவி வரவும். இவ்வாறு செய்து வருவதன் மூலமாக மரு கூடிய விரைவில் சரி ஆகிவிடும். மரு இருந்ததிற்க்கான அடையாளம் கூட எதுவும் இருக்காது.

வயிற்றுப்போக்கு பிரச்சனைக்கு ஒரு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. வயிற்றுப்போக்கு பிரச்சனையால் பாதிக்கப்பட்டவர்கள் சிறிதளவு அம்மான் பச்சரிசி இலையை பறித்து நன்கு சுத்தம் செய்து எடுத்து கொள்ளுங்கள். பின் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அவற்றில் சுத்தம் செய்து வைத்துள்ள அம்மான் பச்சரிசி மூலிகை செடியினை போட்டு தண்ணீரின் நிறம் மாறும் வரை நன்கு கொதிக்க வைத்து எடுத்து கொள்ளுங்கள். பின் இந்த நீரை வடிகட்டி மிதமான சூட்டில் பருக வேண்டும். இவ்வாறு குடிப்பதன் மூலம் வயிற்றுபோக்கு பிரச்சனை குணமாகும்.

# ஜனநாயகன் லீக் விபத்து அல்ல.. கோபமாக பதிவிட்ட கமல்ஹாசன்




ஜன நாயகன் படம் பைரஸி இணையதளங்களில் கசிந்தது பற்றி சினிமா நட்சத்திரங்கள் பலரும் கடும் அதிர்ச்சி உடன் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

"திரை அமைப்புகள் இதற்கு எதிராகக் குரல் எழுப்பி, அரசு இதைச் செய்தவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். இது போன்ற குற்றம் இனியும் தொடரக்கூடாது" என நடிகர் ரஜினி பதிவிட்டு இருந்தார்.

இந்நிலையில் நடிகர் கமல்ஹாசன் தற்போது ஜனநாயகன் லீக் விவகாரம் பற்றி கடும் கோபத்துடன் பதிவிட்டுள்ளார்.

"ஜனநாயகன் லீக் ஆனது விபத்து அல்ல. அது தோல்வியால் வந்த முடிவு. சரியான முறையில் எல்லாம் நேரத்திற்கு நடந்திருந்தால் , இது நடந்திருக்கிறது."

"சான்றிதழ் அளிப்பதில் ஏற்பட்ட தமாதம் தான் இந்த பைரஸிக்கு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது"என கமல் பதிவிட்டு இருக்கிறார்.



**சினிமா**

பிரக்யா ஜெய்ஸ்வால் மாலத்தீவுக்கு ட்ரிப் சென்று இருக்கும் நிலையில் அங்கு பிகினியில் வேற லெவல் கவர்ச்சியாக போஸ் கொடுத்து இருக்கிறார்.

அந்த ஹாட் புகைப்படங்கள் இணையத்தில் படுவைரல் ஆகி இருக்கிறது.

# விக்ரம் படத்தில் முதன் முதலில் வில்லனாக நடிக்கவிருந்தது விஜய் சேதுபதி இல்லை! வேறு யார் தெரியுமா?



இயக்குநர் லோகேஷ் கனகராஜின் இயக்கத்தில் வெளிவந்து பிளாக்பஸ்டர் வெற்றியை கமல் ஹாசனுக்கு தேடி தந்த திரைப்படம் விக்ரம்.

கடந்த 2022ஆம் ஆண்டு வெளியான இப்படத்தில் கமலுடன் இணைந்து விஜய் சேதுபதி, பகத் பாசில், சூர்யா, காயத்ரி ஆகியோர் நடித்திருந்தனர். அனிருத் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இப்படத்தில் வெறித்தனமான வில்லனாக சந்தனம் என்கிற கதாபாத்திரத்தில் மக்கள் செல்வன் விஜய் சேதுபதி நடித்திருந்தார். அதுவும் அவருடைய என்ட்ரி சீன் செம மாஸாக இருக்கும். இப்படத்தின் வெற்றிக்கு விஜய் சேதுபதி மிகப்பெரிய காரணமாக இருந்தார்.

ஆனால், இவர் ஏற்று நடித்திருந்த சந்தனம் என்கிற கதாபாத்திரத்தில் முதன் முதலில் நடிக்கவிருந்தது ராகவா லாரன்ஸ் தானாம்.

படத்தின் கதை கேட்கும் போது, அதில் ஒரு குடும்பத்தை எரிப்பது போல் காட்சி இருக்கிறது என்பதால், இப்படத்தில் நடிக்க ராகவா லாரன்ஸ் மறுப்பு தெரிவித்துள்ளார். இதனை அவரே பேட்டி ஒன்றில் வெளிப்படையாக கூறியுள்ளார்.

# போகர் பிரதிஷ்டை செய்த சிவபோக சக்கரம்



திருக்காமேஸ்வரர், சந்நிதியில் சிவபோக சக்கரம் உள்ளது. இதை போகர் சித்தர் பிரதிஷ்டை செய்து அதில் அமர்ந்து தவம் செய்தார். இதன்பிறகே பழநியில் நவபாஷாண ஞான தண்டாயுதபாணி விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்ததாக "போகர் ஏழாயிரம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது. திருக்காமேஸ்வரர் சந்நிதியில் அமர்ந்து தவம் செய்தால் எத்தகைய கடினமான சித்திகளும் கைகூடும் என்பதால், பாம்பாட்டி சித்தர், புலிப்பாணி தலைமையில் கோயிலைச் சூழ்ந்து சித்தர்கள் குழுமமே தவம் செய்துள்ளனர். கோயிலில் தெற்கு வாசல், கிழக்கு வாசல் என்று இரு நுழைவாயில்கள் உள்ளன.


ஐஸ்வர்யலட்சுமி சிறப்பு: சிவபெருமானின் தரிசனம் வேண்டி, மகாலட்சுமி, இத்தலத்துக்கு வந்து ஈசனைக் குறித்து தவம் செய்தாள். இறைவன் அவளுக்குக் காட்சி தரவில்லை. எனவே, தன்னை ஒரு வில்வ மரமாக மாற்றிக் கொண்டு வில்வ இலை மழை பொழிந்து பூஜை செய்தாள். அதன் பின் ஈசன் அவளுக்கு காட்சி தந்தார். வில்வ மரமாகத் தோன்றி, தன்னை அர்ச்சித்த காரணத்தால், ஸ்ரீவத்ஸ முத்திரை பதித்த சிவலிங்கத்துடன் கூடிய ஐஸ்வர்ய மகுடத்தை லட்சுமிதேவிக்கு அளித்து, சகல செல்வத்துக்கும் அதிபதி ஆக்கினார். இத்தலத்திலேயே தங்கி இங்கு வரும் பக்தர்களுக்கு அவரவர் பாவ புண்ணியத்திற்கேற்ப செல்வத்தை அருளும்படி கூறினார். இவள் அபய, வரத திருக்கரங்களோடு, மேலிரு கரங்களில் தாமரை மலருடன் காட்சி தருகிறாள். இங்குள்ள தீர்த்தம் ஐஸ்வர்ய தீர்த்தம் எனப்படுகிறது. இதனால் இவளுக்கு "ஐஸ்வர்யா' என்ற திருநாமமும் இருக்கிறது. ஐஸ்வர்ய மகாலட்சுமிக்கு அபிஷேகம் செய்யும் முன் வில்வமரத்துக்கே முதலில் பூஜை செய்கிறார்கள். வில்வாரண்யேஸ்வரர், ஐஸ்வர்யேஸ்வரர், லட்சுமிபுரீஸ்வரர், ஸ்ரீவத்ஸ அனுக்ரஹர் என்றும் இத்தலத்து ஈசனுக்கு திருநாமங்கள் உண்டு. சுக்ரன் இத்தலத்தில் ஈசனை வழிபட்டு போகத்திற்கு அதிபதியான தலம்.

அமைவிடம் : வெள்ளூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,முசிறி வட்டம், திருச்சியில் இருந்து குணசீலம் செல்லும் சாலையில் மேற்கே 32 கி.மீ. தொலைவிலும், முசிறியிலிருந்து கிழக்கே 6 கி.மீ. தொலைவிலும் அமைந்திருக்கும் கிராமம் வெள்ளூர் ஆகும்.இந்த ஆலயத்தில் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பிகா உடனுறை திருக்காமேஸ்வரர், ஸ்ரீஐஸ்வர்ய மஹாலக்ஷ்மி திருக்கோவில் அமைந்திருக்கிறது



வீ. விஸ்வநாதன்
டெபுடி ஜெயிலர் ( ஓய்வு)
மண்ணச்சநல்லூர்.



# தினம் ஒரு தலைவர்கள்

# சுசேதா கிருபளானி வரலாறு

சுசேதா கிருபளானி 25 ஜூன் 1908 1 டிசம்பர் 1974 ஒரு இந்திய அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார் . அவர் இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராகவும் , 1963 முதல் 1967 வரை உத்தரபிரதேச அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார் .

ஆரம்ப கால வாழ்க்கை
அவர் பஞ்சாபின் இப்போது ஹரியானாவில் உள்ளது) அம்பாலாவில் ஒரு பெங்காலி பிராஹ்ம குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை சுரேந்திரநாத் மஜூம்தார், ஒரு மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார் , அந்த வேலைக்கு பல இடமாற்றங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, அவர் பல பள்ளிகளில் பயின்றார் , அவரது இறுதிப் பட்டம் டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் ஆகும் .
நாட்டின் சூழல் தேசியவாத உணர்வுகளால் சூழப்பட்டு , சுதந்திரப் போராட்டம் உத்வேகம் பெற்று வந்த காலம் அது.
அவள் ஒரு கூச்ச சுபாவமுள்ள குழந்தை, தன் தோற்றம் மற்றும் அறிவுத்திறன் குறித்து சுயநினைவு கொண்டவள் என்று அவள் தனது "முடிக்கப்படாத சுயசரிதை" புத்தகத்தில் சுட்டிக்காட்டுகிறாள் . அவள் வளர்ந்த வயதும் அவள் எதிர்கொண்ட சூழ்நிலைகளும் தான் அவளுடைய ஆளுமையை வடிவமைத்தன. 10 வயதில், தானும் தன் உடன்பிறந்தவர்களும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி தங்கள் தந்தையும் அவரது நண்பர்களும் பேசுவதைக் கேட்டதாக சுசேதா விவரிக்கிறார். இது அவர்களை மிகவும் கோபப்படுத்தியது, அவர்கள் விளையாடிய சில ஆங்கிலோ-இந்திய குழந்தைகள் மீது , அவர்களைப் பெயர் சொல்லி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிவதற்கு முன்பு, இந்திரபிரஸ்தா கல்லூரி மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்தார் . 1936 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய நபரான ஜே.பி. கிருபளானியை மணந்தார் , அவர் தன்னை விட இருபது வயது மூத்தவர். இந்த திருமணத்தை இரு குடும்பத்தினரும், காந்தியும் எதிர்த்தனர் , இருப்பினும் அவர் இறுதியில் விட்டுக்கொடுத்தார்.

சுதந்திர இயக்கம் மற்றும் சுதந்திரம்
அவரது சமகாலத்தவர்களான அருணா ஆசஃப் அலி மற்றும் உஷா மேத்தாவைப் போலவே, அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முன்னணியில் வந்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிவினை கலவரங்களின் போது மகாத்மா காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றினார். 1946 இல் அவர் அவருடன் நோகாலிக்குச் சென்றார். இந்திய அரசியலமைப்பு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பெண்களில் இவரும் ஒருவர். கான்பூர் தொகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய துணைக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருந்தார் . இந்திய அரசியலமைப்புக்கான சாசனத்தை வகுத்த துணைக்குழுவின் ஒரு பகுதியாக அவர் ஆனார். ஆகஸ்ட் 14, 1947 அன்று, நேரு தனது புகழ்பெற்ற " டெஸ்டினியுடன் ட்ரைஸ்ட் " உரையை நிகழ்த்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, இவர் அரசியலமைப்பு சபையின் சுதந்திர அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார் . 1940 இல் நிறுவப்பட்ட அகில இந்திய மகிளா காங்கிரஸின் நிறுவனர் ஆவார்.






சுதந்திரத்திற்குப் பிறகு

1949 ஆம் ஆண்டில் (இடமிருந்து வலமாக) உல்லா லிண்ட்ஸ்ட்ரோம் , பார்பரா கோட்டை , கெய்ரின் வில்சன் மற்றும் எலினோர் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் கிருபளானி .
சுதந்திரத்திற்குப் பிறகும், அவர் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டார். 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் மக்களவைத் தேர்தலில், அவர் புது தில்லியில் இருந்து KMPP டிக்கெட்டில் போட்டியிட்டார் : ஒரு வருடம் முன்பு தனது கணவர் நிறுவிய குறுகிய காலக் கட்சியில் சேர்ந்தார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் மன்மோகினி சாகலைத் தோற்கடித்தார் . ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அதே தொகுதியிலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் இந்த முறை காங்கிரஸ் வேட்பாளராக. அவர் கடைசியாக 1967 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் உள்ள கோண்டா தொகுதியிலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் . இதற்கிடையில், அவர் உத்தரபிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார் . 1960 முதல் 1963 வரை, அவர் உ.பி. அரசாங்கத்தில் தொழிலாளர், சமூக மேம்பாடு மற்றும் தொழில்துறை அமைச்சராக பணியாற்றினார். அக்டோபர் 1963 இல், அவர் உத்தரபிரதேசத்தின் முதலமைச்சரானார் , எந்தவொரு இந்திய மாநிலத்திலும் அந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணி. அவரது பதவிக் காலத்தின் சிறப்பம்சம் மாநில ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை உறுதியாகக் கையாண்டது. மாநில ஊழியர்களின் இந்த முதல் வேலைநிறுத்தம் 62 நாட்கள் தொடர்ந்தது. ஊழியர்களின் தலைவர்கள் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டபோதுதான் அவர் விலகினார். ஊதிய உயர்வுக்கான அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம் கிருபளானி ஒரு உறுதியான நிர்வாகியாக தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொண்டார். நிர்வாக முடிவுகள் மற்றும் கட்சி அமைப்பில் மூத்த தலைவர் நிர்மல் சந்திர சதுர்வேதி, எம்.எல்.சி., அவருக்கு ஆதரவளித்தார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, மொரார்ஜி தேசாய் பிரிவுடன் சேர்ந்து கட்சியை விட்டு வெளியேறி NCO ஐ உருவாக்கினார். 1971 தேர்தலில் பைசாபாத் (லோக்சபா தொகுதி) தொகுதியில் NCO வேட்பாளராக அவர் தோல்வியடைந்தார் . 1971 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவர் 1974 இல் இறக்கும் வரை தனிமையில் இருந்தார்.

# காரைக்கால் மீனவர்கள் 12 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை



**காரைக்கால், ஏப்.13:**

கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழகம் மற்றும் காரைக்கால் மீனவர்களை எல்லை தாண்டி அத்துமீறி மீன் பிடித்ததாக கூறி கைது செய்வதை இலங்கை கடற்படை வாடிக்கையாக கொண்டுள்ளது. இலங்கை கடற்படையின் இந்த அட்டூழியத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

காரைக்கால் மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை காரைநகர் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படை, மீனவர்களை சிறைபிடித்து சென்றது. சிறைபிடித்த 12 மீனவர்களையும் காங்கேசன் துறைமுகத்துக்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றனர். ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 12 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.

# மேற்குவங்காளம்: முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க 3.60 கோடி பேர் தகுதி



**கொல்கத்தா, ஏப்.13:**

மேற்குவங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி, 152 தொகுதிகளுக்கு முதற்கட்ட தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது.

மேலும், எஞ்சிய 142 தொகுதிகளுக்கு 2ம் கட்ட தேர்தல் வரும் 29ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்நிலையில், மேற்குவங்காளத்தில் 152 தொகுதிகளுக்குமான முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க 3 கோடியே 60 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதற்கட்ட தேர்தலில் 16 மாவட்டங்களில் உள்ள 142 தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. முதற்கட்ட தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற 3 கோடியே 60 லட்சம் வாக்காளர்களில் 1 கோடியே 84 லட்சம் வாக்காளர்கள் ஆண்கள் என்றும், 1 கோடியே 75 லட்சம் வாக்காளர்கள் பெண்கள் என்றும், 465 வாக்காளர்கள் மூன்றாம் பாலினத்தவர்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# வாக்கு வங்கி அரசியலுக்கு முடிவு கட்ட பொது சிவில் சட்டம்: மேற்கு வங்கத்தில் பிரதமர் மோடி வாக்குறுதி



**கொல்கத்தா, ஏப்.13:**

மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சிக்கு வந்தால், வாக்கு வங்கி அரசியலுக்கு நிரந்தரமாக முடிவுகட்டும் வகையில் பொது சிவில் சட்டம் அமலாக்கப்படும் என்று பிரதமா நரேந்திர மோடி வாக்குறுதி அளித்தாா.

மேற்கு வங்கத்தில் வரும் 23, 29 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக சட்டப்பேரவைத் தோ்தல் நடைபெறவுள்ளது. ஆளும் திரிணமூல் காங்கிரஸூம், பாஜகவும் பலப்பரீட்சை நடத்தும் இந்தத் தோ்தலையொட்டி, அரசியல் கட்சியினா் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனா்.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் முா்ஷிதாபாத் மாவட்டத்தின் ஜாங்கிபூா், புா்பா வா்தமான் மாவட்டத்திலுள்ள கத்வா ஆகிய இடங்களில் சனிக்கிழமை நடைபெற்ற பாஜக பிரசாரக் கூட்டங்களில் பிரதமா் மோடி பங்கேற்றாா். ஜாங்கிபூா் கூட்டத்தில் அவா் பேசியதாவது:


பாஜகவைப் பொறுத்தவரை, நாட்டின் பாதுகாப்பே முதன்மையானது. தாய்-தாய்மண்-மக்கள் என்ற தனது பழைய முழக்கத்தை மறந்துவிட்ட திரிணமூல் காங்கிரஸ், ஊடுருவல்காரா்களின் வாக்குகளுடன் மீண்டும் ஆட்சியமைக்க விரும்புகிறது.

குறிப்பிட்ட தரப்பினரை திருப்திப்படுத்தும் இந்த 'ஆட்டத்தையும்', வாக்கு வங்கி அரசியலையும் மேற்கு வங்கம் இனியும் சகித்துக் கொள்ளாது. சட்டவிரோத ஊடுருவலால் மக்கள்தொகை ரீதியிலான மாற்றம் வேகமாக நிகழ்ந்து வருகிறது. எனவே, மாநிலத்தின் அடையாளம் மற்றும் எதிா்காலத்தைக் காப்பதற்கான தோ்தல் இதுவாகும்.

பொது சிவில் சட்டம் அமலாக்கப்படும்: சொந்த மாநிலத்திலேயே வங்காளிகள் சிறுபான்மையினராக மாற நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இங்கு பாஜக ஆட்சிக்கு வந்ததும், வாக்கு வங்கி அரசியலுக்கு நிரந்தரமாக முடிவுகட்ட பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும். மேற்கு வங்க மக்களிடம் கொள்ளையடித்தவா்கள், ஊழலைப் பாதுகாத்தவா்கள், அடக்குமுறையாளா்கள் அனைவரும் சிறையில் தள்ளப்படுவா்.

ஆங்கிலேயா்கள் முதல் காங்கிரஸ், இடதுசாரிகள் வரை ஆணவ ஆட்சியாளா்களைத் தூக்கியெறிந்த வரலாற்றைக் கொண்டது மேற்கு வங்கம். இப்போது திரிணமூல் காங்கிரஸின் முறை. தோ்தலில் தோற்றுவிடுவோம் என்பதை உணா்ந்துகொண்ட திரிணமூல் காங்கிரஸ், சதித் திட்டங்களில் ஈடுபட்டு, செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் உருவாக்கப்பட்ட போலி விடியோக்களைப் பரப்புகிறது. இத்தகைய விடியோக்களுக்கு மக்கள் யாரும் இரையாகிவிடக் கூடாது என்றாா். 'ஊடுருவல்காரா்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டுங்கள்': கத்வா பிரசாரக் கூட்டத்தில் பேசிய பிரதமா் மோடி, மேற்கு வங்கத்தின் தென் பகுதிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ள மதுவா, நாமசூத்ரா சமூகத்தினா் (ஹிந்து அகதிகள்) பலனடையும் வகையில் குடியுரிமை திருத்தச் சட்ட அமலாக்கம் விரைவுபடுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தாா்.

# ஒடிசாவில் ரூ.95 லட்சம் பணமோசடி செய்ததாக பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி மீது வழக்கு பதிவு



**புவனேஸ்வர், ஏப்.13:**

ஒடிசா மாநில அரசின் உள்துறை கூடுதல் செயலாளராக பணியாற்றி வருபவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி அர்ச்சனா தாஸ். இவர் கட்டாக் மாவட்ட மேம்பாட்டு ஆணைய (CDA) திட்டப் பகுதியில் நிலம் தருவதாக வாக்குறுதியளித்து, மாற்றுத்திறனாளியான கமல் குமார் பவ்சிங்கா என்பவரிடம் இருந்து 95 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கமல் குமாரிடம் பணத்தை பெற்ற அர்ச்சனா தாஸ், அவர் கூறியபடி நிலத்தை வழங்கத் தவறியதாகவும், பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. மேலும், கமல் குமார் தனது பணத்தை திருப்பி கேட்டபோது அவருக்கு அர்ச்சனா தாஸ் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்டாக் காவல் நிலையத்தில் கமல் குமார் தரப்பில் புகார் அளிக்கப்பட்ட நிலையில், இந்த புகார் மீதான விசாரணைக்கு அர்ச்சனா தாஸ் ஒத்துழைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதையடுத்து, அரசு ஊழியர்கள்/ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கான விதிகளின்படி, அர்ச்சனா தாஸ் மீது முறைப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி கோரி, மாநில உள்துறை மற்றும் பொது நிர்வாகத் துறைக்கு காவல்துறை ஆணையரகம் கடிதம் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.22 கோடி

**திருப்பதி, ஏப்.13:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 65 ஆயி ரத்து 534 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 24 ஆயிரத்து 560 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தான அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 22 லட்சம் ஆகும்.

# பிரபல பின்னணி பாடகி ஆஷா போஸ்லே காலமானார்!



**புதுடெல்லி, ஏப்.13:**

புகழ்பெற்ற திரைப்பட பின்னணி பாடகி ஆஷா போஸ்லே (92) உடல்நலக்குறைவால் மும்பையில் (ஏப்ரல் 12) காலமானார்.

மகாராஷ்டிர மாநிலம் சாங்கிலியில் 1933 ஆம் ஆண்டு செப். 8இல் பிறந்தவர் ஆஷா போஸ்லே. நெஞ்சு தொற்று, கடுமையான உடல் சோர்வு காரணமாக மும்பை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி பாடகி ஆஷா போஸ்லேவின் உயிர் இன்று பிரிந்தது.

பல்வேறு இந்திய மொழிகளில் 12,000-க்கும் மேற்பட்ட பாடல்களை ஆஷா போஸ்லே பாடியுள்ளார். 80 ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் கலைப் பயணம் நீடித்தது.

பன்முகத்தன்மைக்குப் பெயர் பெற்ற அவர், காதல் பாடல்கள் தொடங்கி கஜல், துள்ளலான பாடல்கள் வரை பல மறக்க முடியாத மெல்லிசைப் பாடல்களைப் பாடியுள்ளார். இவர் மறைந்த புகழ்பெற்ற திரைப்பட பின்னணி பாடகி லதா மங்கேஷ்கரின் தங்கை ஆவார்.

# மேற்குவங்காளம்: டிஜஜி உள்பட 12 போலீஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் - தேர்தல் ஆணையம் அதிரடி

**கொல்கத்தா, ஏப்.13:**

மேற்குவங்காளத்தில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்ட தேர்தல் 23ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் 29ம் தேதியும் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இதனிடையே, தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அதேவேளை, தேர்தலை வன்முறை உள்பட எந்தவித பிரச்சினைகளும் இன்றி நடத்த தேர்தல் ஆணையமும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், மேற்குவங்காளத்தில் டிஜஜி உள்பட 12 பேரை பணியிடமாற்றம் செய்து தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் மேற்கு வங்காளத்தில் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை தேர்தல் ஆணையம் தொடர்ந்து அதிரடியாக இடமாற்றம் செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடக மலையில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பின் சடலமாக மீட்பு

**பெங்களூரு, ஏப்.13:**

கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவில் காணாமல் போன கேரள சிறுமி 4 நாட்களுக்கு பிறகு 1,500 அடி ஆழ பள்ளத்தாக்கில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த ஸ்ரீநந்தா (15), கடந்த 7-ம் தேதி தனது பெற்றோர், உறவினர்கள் 40 பேருடன் கர்நாடகாவுக்கு சுற்றுலா வந்தார். அன்று மாலை 6 மணியளவில் சிக்கமகளூருவில் உள்ள சந்திரோனா மலைப்பகுதிக்கு அனைவரும் சென்று இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தனர். அதன்பிறகு ஸ்ரீநந்தா, மாணிக்தாரா அருவிக்கு அருகில் சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்.

மாலை 7 மணியளவில் இருட்டிய நேரத்தில் ஸ்ரீநந்தா காணாமல் போனது தெரிய வந்தது. இதையடுத்து அவரது பெற்றோர் சிக்கமகளூரு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திரகுமார், வனத்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மீட்புப் படையினர் அடங்கிய 60 குழுக்களை அமைத்து தேடுதல் வேட்டையைத் தொடங்கினார். இரவும் பகலுமாக நடந்த தேடுதல் வேட்டையில், மனிதர்கள் செல்ல முடியாத செங்குத்தான பள்ளத்தாக்குப் பகுதிகளில் தேடுவதற்கு அதிநவீன ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 1,500 அடி பள்ளத்தாக்கில் சிறுமி சடலமாக மீட்கப்பட்டார். அவரது உடலை கண்டு பெற்றோரும் உறவினர்களும் கண்ணீர் விட்டு அழும் காட்சி சோகத்தை ஏற்படுத்தியது.

# 22 நாடுகளின் பிரதிநிதிகள்! தேர்தல் ஆணையத்துக்கு பாராட்டு

**புதுடெல்லி, ஏப்.13:**

'கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் கடந்த ஏப்.8, 9 ஆகிய தேதிகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பயணம் மேற்கொண்டனா். நன்கு திட்டமிடப்பட்ட தளவாட ஏற்பாடுகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளின்கீழ் வாக்குப்பதிவு உபகரணங்களுடன் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு தோ்தல் பணியாளா்களின் முறையான நகா்வை பாா்வையிட்டனா். வாக்குப்பதிவு மையங்களில் 100 சதவீத இணையவழி கண்காணிப்புக்காக, தலைமைத் தோ்தல் அதிகாரி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகளுக்கு வருகை தந்த அவா்கள், உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினா்.

வாக்குப்பதிவு நாளில் மாதிரி வாக்குப்பதிவு முறையை பாா்வையிட்ட அவா்கள், வாக்குச்சாவடிகளுக்கும் நேரில் சென்றனா்.

முழுவதும் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளே நிா்வகிக்கும் வாக்குச்சாவடிகளுக்கு வரவேற்பு தெரிவித்த அவா்கள், அனைத்து தரப்பு வாக்காளா்களுக்கான வசதிகளைக் குறிப்பிட்டு பாராட்டினா்.

'இந்திய தோ்தல்களின் வீச்சு, துல்லியத்தன்மை, துடிப்பான செயல்முறை ஈா்ப்புக்குரியது; இந்தத் தோ்தல்கள், ஒட்டுமொத்த உலகுக்கும் உண்மையான ஜனநாயகத் திருவிழா' என்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் புகழாரம் சூட்டியதாக தோ்தல் ஆணைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டக் கட்டமைப்புகள் முழுவதிலும் சீா்திருத்தம்: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி வலியுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.13:**

டில்லியில் இந்திய வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் 10 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார சக்தியாக பாரதத்தை உருவாக்கும் வகையில் சட்ட சீர்திருத்தம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, 'சட்ட விதி மாநாடு 2026' நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தலைமை நீதிபதி சூர்ய காந்த் பேசியதாவது: 10 டிரில்லியன் டாலர் பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுப்பது நிச்சயம். இந்த 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை மூலதனத்தாலோ அல்லது கொள்கையாலோ மட்டும் உருவாக்க முடியாது. இதற்கு நல்ல சட்ட அமைப்பும் அவசியமாகும். அந்த சட்ட அமைப்பால்தான், சட்ட அமலாக்கத்தை உறுதி



செய்யவும், வாக்குறுதிகளை செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் முடியும். அத்தகைய நல்ல சட்ட அமைப்பை உருவாக்க நமது நாட்டில் திறமையான சட்ட நிபுணர்கள் பலர் உள்ளனர் என்றார்.

இதேபோல், டில்லியில் நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சியில் சூர்ய காந்த் பேசுகையில், 'சட்ட அமைப்புகளில் தொழில்நுட்பங்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தொழில்நுட்பத்தை நிர்வாகம் செய்வதற்கான காரணியாக மட்டும் பார்க்கக் கூடாது. சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுவதை தொழில்நுட்பமே வலுப்படுத்துகிறது.

சாதாரண மக்களுக்கும், வழக்குரைஞர்களுக்கும், நீதித் துறை சம்பந்தப்பட்டோருக்கும் எப்படி பயனளிக்கிறது என்பதை வைத்தே, நீதித் துறை சீர்திருத்தம் மதிப்பிடப்படுகிறது.

ஒவ்வொரு நீதிமன்றத்திலும் தொழில்நுட்பக் கருவிகளை மட்டும் வைத்தால் போதாது. காகிதம் இல்லாமல் நீதிமன்றம் செயல்படுவதையும் நாம் உறுதி செய்ய வேண்டும்' என்றார்.

# யுஜிசி விதிகளுக்கு முரணாக பட்டங்கள், படிப்புகள்: போலி கல்வி நிறுவனங்கள் குறித்து புகார் அனுப்பலாம்




**புதுடெல்லி, ஏப்.13:**

பல்கலைக்கழகங்கள் அல்லது கல்விநிறுவனங்கள் யுஜிசி விதிகளுக்கு முரணாக பட்டங்கள் மற்றும் படிப்புகளை வழங்கினால், அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மின்னஞ்சலுக்கு புகார்களை அனுப்பலாம் என யுஜிசி தெரிவித்துள்ளது.

இது குறித்து பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி வெளியிட்ட அறிவிப்பு: மத்திய, மாநில பல்கலைக்கழகங்கள் அல்லது யுஜிசி சட்ட விதிகளின்படி உரிய அதிகாரம் பெற்ற உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே பட்டங்களை வழங்க முடியும் என்பது மாணவர்கள், பெற்றோரின் கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது. எனினும், யுஜிசி விதிமுறைகளுக்கு முரணாக பல்வேறு நிறுவனங்கள் பட்டங்களை வழங்கி வருவதாக புகார்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதன்படி, இத்தகைய பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் பட்டங்கள் யுஜிசியால் அங்கீகரிக்கப்பட மாட்டாது. மேலும், அவை உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கும் செல்லுபடியாகாது.

எனவே, மாணவர்கள், பெற்றோர் உயர்கல்விக்காக எந்தவொரு கல்வி நிறுவனத்திலும் சேர்க்கை பெறுவதற்கு முன்பு அது அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

மேலும், யுஜிசி அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் போலி உயர்கல்வி நிறுவனங்களின் விவரங்களை ஜ்ஜ்ஜ். ன்ஞ்ஸ்ரீ. ஞ்ர்ஸ். ண்ய் என்ற இணைய தளத்தில் சரிபார்த்து கொள்ளலாம்.

தவிர ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனம் யுஜிசி விதிகளுக்கு முரணாக பட்டங்கள் மற்றும் படிப்புகளை வழங்கினால், அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மின்னஞ்சலுக்கு புகார்களை அனுப்பலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.




# சென்னை: பால்கனியில் இருந்து விழுந்த ஆட்டோ ஓட்டுநர் உயிரிழப்பு




**சென்னை, ஏப்.13:** சென்னை நுங்கம்பாக்கத்தில் மதுபோதையில் நிலை தடுமாறி 2-வது மாடியிலிருந்து கீழே விழுந்த ஆட்டோ ஓட்டுநர். அருகில் இருந்த கோயில் சுற்றுச்சுவர் கம்பியில் குத்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சென்னை, நுங்கம்பாக்கம், அகத்தீஸ்வரர் கோயில் தெருவைச் சேர்ந்தவர் தேவநாதன் (60). ஆட்டோ ஓட் டுநரான இவர், நேற்று முன்தினம் இரவு பணி முடிந்து வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அப்போது, அவர் மதுபோதை யில் இருந்ததாகக் கூறப்படுகிறது. வீட்டின் 2-வது மாடி யில் உள்ள பால்கனியில் தேவநாதன் நின்று கொண்டிருந் தபோது, எதிர்பாராதவிதமாக நிலைத் தடுமாறியுள்ளார்.

இதில் பால்கனியிலிருந்து தலைகுப்புற கீழே விழுந்த அவர். வீட்டை ஒட்டி அமைந்திருக்கும் தெப்பக்குளம் கோயில் சுற்றுச்சுவரின் இரும்பு கம்பி மீது விழுந்தார். கூர்மையான இரும்பு கம்பி தேவநாதனின் உடலில் பலமாக குத்தியதில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

தகவலறிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நுங்கம்பாக்கம் காவல்துறையினர். இரும்பு கம்பியில் சிக்கியிருந்த தேவநாதனின் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள போலீஸார், விபத்து தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னை: சிக்கன் பக்கோடா தர மறுத்த வியாபாரி மீது கொதிக்கும் எண்ணெயை ஊற்றியவர் கைது



**சென்னை, ஏப்.13:** ஆவடியை அடுத்த பட்டாபிராம், பாரதிதாசன் தெருவை சேர்ந்த அந்தோணி (57), புழல் ஜினன்டி சாலையில் சர்வீஸ் சாலையில் தள்ளுவண்டியில் சிக்கன் பக்கோடா விற்பனை செய்து வருகிறார்.

நேற்றிரவு. இவரது கடைக்கு வந்த புழல், திருவீதி அம்மன் கோயில் தெருவை சேர்ந்த வழக்கறிஞர் ராஜ்குமார் (33), சிக்கன் பக்கோடா வாங்கிவிட்டு அதற்கு பணம் தராமல் சென்றதும் அந்தோணி அவரிடம் பணம் கேட்டதில் தரமுடியாது என கூறியதால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் ராஜ்குமார் சட்டியில் இருந்த கொதிக்கும் எண்ணெயை அந்தோணி மீது ஊற்றினார். இதில் அவருக்கு முதுகு, தோள்பட்டையில் தீக்காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் அவரை அரசு பெரியார் நகர் மருத்துவமனையில் சேர்த்தனர். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீஸார் ராஜ்குமாரை கைது செய்து புழல் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

# அருமனையில் பெண்ணுடன் ரகசிய தொடர்பு சம்பவம்; சரமாரி தாக்குதலில் தொழிலாளி சிகிச்சை பலனின்றி பலி

**அருமனை, ஏப்.13:** குமரி மாவட்டம் குலசேகரம் அருகே பொன்மனை மண்ணாரன்கோடு பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் (48). அவரது மனைவி லதா (44). இந்த தம்பதிக்கு 2 மகன்கள் உள்ளனர். ஜஸ்டின் அடிக்கடி மது குடித்து விட்டு வந்து மனைவியிடம் தகராறு செய்து வந்ததாக தெரிகிறது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அருமனை பகுதியை சேர்ந்த அஜி (52) என்பவர் ரப்பர் பால் வெட்டும் வேலைக்காக ஈஞ்சகோட்டில் ஜஸ்டின் வீட்டருகே குடி வந்துள்ளார். அப்போது அஜி, லதா இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அஜி அருமனை அருகே காரோடு பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளார். அதைத்தொடர்ந்து லதா, கணவரை விட்டு பிரிந்து ஒரு மகனுடன் வாடகை வீட்டில் குடியேறினார்.

பின்னர் 6 மாதங்களுக்கு முன்பு இந்த விவகாரம் அஜியின் குடும்பத்தினருக்கு தெரியவந்தது. இதற்கு குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்தால் அவர் லதாவுடன் நிரந்தரமாக தங்கினார். இந்த நிலையில் கடந்த 5ம் தேதி லதா, அஜி வீட்டில் இருந்தபோது அங்கு சென்ற லதாவின் கணவர் ஜஸ்டின், விஜித் உள்பட 4 பேர் ஜன்னல், கதவுகளை அடித்து உடைத்ததோடு, அங்கிருந்த அஜியை சரமாரியாக ஆயுதங்களால் தாக்கினர். தடுக்க வந்த லதாவை சாவியால் குத்திவிட்டு தப்பி சென்றனர். இதுகுறித்த தகவலின் பேரில் அருமனை இன்ஸ்பெக்டர் கமலாதேவி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று சுயநினைவை இழந்த அஜியை மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கும், லதாவை அருமனை அரசு மருத்துமனைக்கும் அனுப்பி வைத்தனர்.

பின்னர் அஜி மேல் சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் கொலை முயற்சி என வழக்குப்பதிவு செய்து ஜஸ்டின் உள்பட 4 பேரை வலைவீசி தேடினர். இதையடுத்து அருமனையில் பதுங்கி இருந்த ஜஸ்டின் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த அஜி இன்று காலை பரிதாபாக இறந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த அருமனை போலீசார் மருத்துவமனைக்கு சென்று அஜியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து கொலை முயற்சி வழக்கை கொலை வழக்காக மாற்றி பதிவு செய்த போலீசார் கொலையில் தொடர்புடைய பொன்மனை வெண்டலிகோடு புனையன்குழி பகுதியை சேர்ந்த அஜித் மற்றும் பாறையில் வீட்டை சேர்ந்த குமார் மகன் சந்தீப் (24) ஆகிய 2 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். பின்னர் அவர்கள் குழித்துறை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஏற்கனவே ஜஸ்டஸ் கைதான நிலையில் இச்சம்பவத்தில் மொத்தம் 3 பேர் கைதாகி உள்ளனர். தலைமறைவாக இருக்கும் விஜித்தை போலீசார் தேடி வருகின்றனர்.

# விடுமுறை தினம்: கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

**கன்னியாகுமரி, ஏப்.13:** சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள்.




இந்தநிலையில் இன்று ஞாயிறு விடுமுறையையொட்டி காலையில் இருந்தே கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் நள்ளிரவு முதல் காத்திருந்து சூரிய உதயத்தை கண்டு ரசித்தனர்.

அதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். படகுத்துறையில் இருந்து சுற்றுலா பயணிகள் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்த்து ரசித்து வருகின்றனர். காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள தமிழன்னை பூங்கா, சன்செட் பாயிண்ட், அரசு அருங்காட்சியகம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

# பராமரிப்பு பணி: தாம்பரம்-விழுப்புரம் பயணிகள் ரெயில் ரத்து-தெற்கு ரெயில்வே அறிவிப்பு




**சென்னை, ஏப்.13:** தெற்கு ரெயில்வே சென்னைகோட்டம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை எழும்பூர் - விழுப்புரம் வழித்தடத்தில் உள்ள சிங்கபெருமாள் கோவில் - செங்கல்பட்டு ரெயில் நிலையங்களுக்கு இடையே இன்று காலை 9.35 மணி முதல் மதியம் 12.05 மணி வரையிலும் (2 மணி நேரம் 30 நிமிடம்), இதேபோல, நாளை (திங்கட்கிழமை) முதல் 16-ந்தேதி வரையில் மதியம் 1.20 மணி முதல் மாலை 3.20 மணி வரையிலும் (2 மணி நேரம்) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் மின்சார ரெயில் மற்றும் பயணிகள் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

இன்று பகுதி நேர ரத்து

* விழுப்புரத்தில் இருந்து இன்று மதியம் 1.30 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் பயணிகள் ரெயில் (66046), விழுப்புரம்-தாம்பரம் இடையே பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

*சென்னை கடற்கரையில் இருந்து இன்று காலை 5.35 மணிக்கு புறப்பட்டு காஞ்சிபுரம் செல்லும் மின்சார ரெயில் வாலாஜாபாத்-காஞ்சிபுரம் இடையே பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

*சென்னை கடற்கரையில் இருந்து இன்று காலை 8.10, 9.30 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில்கள் சிங்கபெருமாள் கோவில்-செங்கல்பட்டு இடையேயும், செங்கல்பட்டில் இருந்து காலை 8.45, 9.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் செங்கல்பட்டு-சிங்கபெருமாள் கோவில் இடையேயும் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

*சென்னை கடற்கரையில் இருந்து இன்று காலை 8.50, 10 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில்கள் காட்டாங்குளத்தூர்-செங்கல்பட்டு இடையேயும், செங்கல்பட்டில் இருந்து காலை 10.40,11.35 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் செங்கல்பட்டு-காட்டாங்குளத்தூர் இடையேயும் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

13-ந்தேதி முதல் 16-ந்தேதி வரை...

* சென்னை கடற்கரையில் இருந்து நாளை (திங்கட்கிழமை) முதல் வருகிற 16-ந்தேதி வரையில் காலை 11.40, மதியம் 12.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில்கள் சிங்கபெருமாள்கோவில்-செங்கல்பட்டு இடையேயும், செங்கல்பட்டில் இருந்து மதியம் 1.10, 2.20 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் செங்கல்பட்டு-சிங்கபெருமாள் கோவில் இடையேயும் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

*சென்னை கடற்கரையில் இருந்து நாளை (திங்கட்கிழமை) முதல் வருகிற 16-ந்தேதி வரையில் மதியம் 12.28, 1.45 ஆகிய நேரங்களில் புறப்பட்டு செங்கல்பட்டு செல்லும் மின்சார ரெயில்கள் காட்டாங்குளத்தூர்-செங்கல்பட்டு இடையேயும், செங்கல்பட்டில் இருந்து மதியம் 1.45, மாலை 3.05 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயில்கள் செங்கல்பட்டு-காட்டாங்கொளத்தூர் இடையேயும் பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவள்ளூரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.9 கோடி நகைகள் பறிமுதல்




**சென்னை, ஏப்.13:** வாகன சோதனையின்போது, உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.9 கோடி மதிப்பிலான நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்கும் நடவடிக்கையாக தேர்தல் பறக்கும் படையினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் திருவள்ளூர்- திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் லட்சுமாபுரம் பகுதியில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக சென்னையில் இருந்து திருப்பதி நோக்கி சென்ற சரக்கு வாகனத்தை பறக்கும் படையினர் நிறுத்தி சோதனை செய்தனர். அந்த வாகனத்தில் உரிய ஆவணங்களின்றி ரூ.8 கோடி மதிப்பிலான தங்க நகைகள், ரூ.1 கோடி மதிப்பிலான வெள்ளிப் பொருள்கள் ஆகியவை இருந்தது தெரியவந்தது.

மேலும், அந்த வாகனத்தில் வந்தவர்களிடம் விசாரணை செய்ததில் சென்னை கிண்டியில் செயல்பட்டு வரும் தனியார் நகை கடையில் இருந்து திருப்பதியில் உள்ள கிளைக்கு நகை, வெள்ளிப் பொருட்களை கொண்டு செல்வதாக பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பறிமுதல் செய்த நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை பாதுகாப்பாக கொண்டு சென்று திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் சு.ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அந்த நகைகள் மற்றும் வெள்ளிப் பொருட்களை ஆய்வு செய்த தேர்தல் நடத்தும் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் சு.ரவிச்சந்திரன் கருவூலத்தில் ஒப்படைத்தார். அப்போது அவர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மீண்டும் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தினார்.

# தமிழகம் முழுவதும் பூத் சிலிப் வழங்கும் பணி தொடங்கியது-18-ந்தேதிக்குள் விநியோகிக்க ஏற்பாடு



**சென்னை, ஏப்.13:** தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., த.வெ.க. உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த தேர்தல்களில் வழங்கப்பட்டு வந்த புகைப்படத்துடன் கூடிய பூத் சிலிப்களுக்குப் பதிலாக, இந்த முறை தேர்தல் ஆணையம், வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. வாக்காளர்களின் வசதியை அதிகரிக்கும் நோக்கில் இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டு உள்ளது. மாற்றி அமைக்கப்பட்ட வடிவமைப்பில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பகுதி எண் ஆகியவை சீட்டின் மேல் வலது மூலையில் பெரிய எழுத்துருவில் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கும்.

இந்த மாற்றம் மூலம் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடியை எளிதில் அடையாளம் காணவும், வாக்குப்பதிவு அலுவலர்கள் வாக்காளர் பெயரை வாக்காளர் பட்டியலில் விரைவாக கண்டறியவும் உதவியாக இருக்கும்படி அமைக்கப்பட்டு உள்ளது.

அதில் ஒரு வாக்காளரின் பெயர், வயது, பாலினம், சட்டமன்றத் தொகுதி, வாக்குச்சாவடி அமைவிடம் மற்றும் வாக்குப்பதிவு நடைபெறும் தேதி, நேரம் போன்ற விவரங்கள் அடங்கியுள்ளன. இதில் தனிப்பட்ட மற்றும் வாக்குப்பதிவுத் தகவல்கள் இருந்தாலும், வாக்களிப்பதற்கு அதைத் தனிப்பட்ட அடையாள ஆவணமாகப் பயன்படுத்த முடியாது. தமிழகம் முழுவதும் இன்று வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணி தொடங்கியது. இவை அந்தந்த பகுதிகளின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது.

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகத்திற்கான அட்டவணையை தயாரித்து உள்ளனர். அதன் அடிப்படையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வீடு வீடாக சென்று இவை வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கும் ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டினை வழங்கி கையெழுத்து அல்லது விரல் அடையாளத்தைப் பெற அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

விநியோகிக்கப்படாத வாக்காளர் தகவல் சீட்டு அனைத்தும் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மூலமாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் திருப்பி வழங்கிடவும், அவை மூடும் உறையில் பாதுகாப்பாக வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருகிற 18-ந்தேதிக்குள் இந்த பணிகளை முடிக்க தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு இன்று முதல் வருகிற 18-ந்தேதி வரை வாக்காளர் தகவல் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த பணியை தேர்தல் அதிகாரியும் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையருமான குமரகுருபரன் தொடங்கி வைத்தார்.

# தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்று திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது




சென்னை: தமிழகத்தில் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்று திறனாளிகளுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது. தபால் வாக்கு அளிக்க விண்ணப்பித்தவர்களிடம் வாக்குச்சாவடி அலுவலர்கள் நேரில் சென்று வாக்குகளைப் பெறுகின்றனர். பாதுகாப்புப் பணியில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் பார்வையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தச் சிறப்புத் தபால் வாக்குப்பதிவு மூன்று நாட்களுக்கு நடைபெறும்

தமிழ்நாட்டில் 2026 ஏப்ரல் 11 முதல் 85 வயதுக்கு மேற்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் (PwD) மற்றும் அத்தியாவசியப் பணிகளில் உள்ளவர்களுக்கான தபால் வாக்குப்பதிவு தொடங்கியது.

தகுதியுள்ள வாக்காளர்கள் படிவம் 12D மூலம் விண்ணப்பித்து, தேர்தல் ஆணையத்தின் மூலம் வீட்டிலிருந்தே அல்லது பிரத்யேக மையங்களில் (PVC) வாக்களிக்கலாம். ஏப்ரல் 18, 20 தேதிகளில் காவலர்கள் மற்றும் தேர்தல் பணியாளர்கள் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் அலுவலர்கள், காவலர் மற்றும் வீடியோகிராபர் குழுவினர் வீடு தேடி வந்து தபால் வாக்குகளைச் சேகரிக்கின்றனர். வாக்களித்த தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளுக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த செயல்முறை, அந்தந்த வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில், ரகசியத்தன்மை காக்கப்பட்டு, வீடியோ பதிவுடன் (Videography) நடைபெறுகிறது. EVM இயந்திரங்களில் வாக்குகள் எண்ணப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக தபால் வாக்குகள் எண்ணப்படும்.

# 15-ந்தேதி தொடங்குகிறது மீன்பிடி தடைக்காலம்.. தமிழகத்தில் எங்கெல்லாம் தடை..?



**சென்னை, ஏப்.13:** தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ், கடல் வளத்தைப் பாதுகாக்கவும் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் ஆண்டு தோறும் மீன்பிடி தடைக்காலம் 61 நாட்கள் கடைபிடிக்கப்படுகிறது. அதாவது ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலம் மீன்கள் முட்டையிட்டுஇனப்பெருக்கம் செய்யும் காலமாகும்.

இந்த காலத்தில் விசைப்படகுகளின் எந்திர இரைச்சல் மற்றும் ராட்சத வலைகளால் மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவே ஏப்ரல் 15-ந்தேதி முதல் ஜூன் மாதம் 14-ந்தேதி வரை கடலுக்கு 'ஓய்வு' அளிக்கப்படுகிறது.

இதன் மூலம் சிறிய மீன் குஞ்சுகள் அழிவதைத் தடுத்து, வருங்காலங்களில் மீன் வளம் பெருக வழிவகை செய்யப்படுகிறது. தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும் இந்த மீன்பிடித் தடைக்காலம் வரும் 15-ந்தேதி புதன்கிழமை முதல் தொடங்குகிறது. இந்த தடை அமலுக்கு வரும்போது மீனவர்கள் கடலில் இருக்கக்கூடாது என்பது விதிமுறை ஆகும்.

எனவே, ஏற்கனவே கடலுக்குச் சென்றுள்ள விசைப்படகுகள் அனைத்தும் ஏப்ரல் 14-ந்தேதி நள்ளிரவுக்குள் கரை திரும்ப அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதனால் குறுகிய தூர மீன்பிடிப்புக்காக விசைப்படகுகள் ஆழ்கடலுக்குச் செல்வது இன்றே கடைசி நாளாக இருக்கும்.

இந்த மீன் தடையின் காரணமாக அடுத்த இரண்டு மாதங்களுக்கு ஆழ்கடல் மீன்வரத்து இருக்காது என்பதால், தடைக்காலத்திற்கு முந்தைய கடைசி ஞாயிற்றுக்கிழமையான இன்று (ஏப்ரல் 12) மீன் சந்தைகளில் விற்பனை வரலாறு காணாத உச்சத்தைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இன்று சென்னை காசிமேடு, வானகரம், சிந்தாதிரிப் பேட்டை போன்ற மீன் மார்க்கெட்டுகளில் மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இதனிடையே மீனவர்களுக்கு தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.8 ஆயிரம், தேர்தல் காலம் என்பதால் தமிழக அரசு கடந்த மாதமே அவர்களது வங்கி கணக்கில் செலுத்திவிட்டது.

எங்கெல்லாம் தடை


தமிழகத்தின் வடக்கே திருவள்ளூர் முதல் தெற்கே கன்னியாகுமரி (கிழக்கு கடற்கரை பகுதி) வரையிலான சுமார் 1,076 கி.மீ. நீளமுள்ள கடலோரப் பகுதிகளில் இந்தத் தடை அமலுக்கு வருகிறது.

அதன்படி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை,ராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை மற்றும் கன்னியாகுமரி (கிழக்கு கடற்கரை பகுதிகள்) ஆகிய பகுதிகள் முழுவதும் ஆழ்கடலுக்கு செல்ல தடை விதிக்கப்படுகிறது.

மேலும் நமது அண்டை மாநிலமான புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இதே காலத்தில் மீன்பிடி தடைக்காலம் கடைபிடிக்கப்படுகிறது.

# 2 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை

**திருவள்ளூர் போக்சோ கோர்ட்டு தீர்ப்பு**



**திருவள்ளூர், ஏப்.13:** சென்னை ஆவடி அடுத்த பட்டாபிராம் பகுதியைச் சேர்ந்தவர் 36 வயது தொழிலாளி. இவர் கடந்த 2019-ம் ஆண்டு தனது முதல் மனைவியின் 16 வயது மகளையும், 2-வது மனைவியின் 13 வயது மகளையும் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி வந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்த புகாரின்பேரில் ஆவடி அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

பின்னர் அவர் திருவள்ளூர் போக்சோ கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கு திருவள்ளூர் மாவட்ட போக்சோ கோர்ட்டில் விசாரணை நடந்து வந்தது. வழக்கின் இறுதி விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி உமாமகேஸ்வரி, தனது சொந்த மகள்களை பாலியல் வன்கொடுமை செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து, தொழிலாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1.64 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

அபராத தொகையை செலுத்தத் தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட இரு சிறுமிகளுக்கும் தலா ரூ.5 லட்சம் இழப்பீடு அரசால் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து, ஆவடி அனைத்து மகளிர் போலீசார் குற்றவாளியை மீண்டும் புழல் சிறையில் அடைத்தனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



**சென்னை, ஏப்.13:** கர்நாடகா மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகிய அணைகளில் இருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து இந்த அணைகளில் நீர் திறப்பு அதிகரித்தும், குறைந்தும் திறந்து விடப்படுகிறது.

தமிழகம்-கர்நாடக எல்லையான பிலிகுண்டு வழியாக இந்த தண்ணீர் மேட்டூர் அணைக்கு வருகிறது. கடந்த 2 நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1000 கன அடிக்கு மேல் வந்து கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் மேட்டூர் அணைக்கு 242 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று 1,017 கன அடியாக உயர்ந்தது.

இன்று நீர்வரத்து மேலும் அதிகரித்து வினாடிக்கு 1,127 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,200 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரை விட திறந்து விடப்படும் தண்ணீர் அதிகமாக உள்ளதால் மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது.

நேற்று 82.14 அடியாக இருந்த நீர்மட்டம் இன்று 82.09 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 44.07 டி.எம்.சி.யாக உள்ளது.

# காரைக்கால் மீன் பிடித்துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற 12 மீனவர்களை கைது செய்தது இலங்கை கடற்படை



**காரைக்கால், ஏப்.13:** காரைக்கால் மீனவர்கள் 12 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்தது. காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இலங்கை காரைநகர் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படை, மீனவர்களை சிறைபிடித்தது.

சிறைபிடித்த 12 மீனவர்களை காங்கேசன் துறைமுகத்துக்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றனர். ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 12 மீனவர்களையும் சிறைபிடித்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளனர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் மீனவர்கள் மீது யாழ்ப்பாண நீரியல்வள திணைக்களத்தினரால்

இலங்கை நீர் பரப்பு எல்லைக்குள் அடக்கிய யாழ்ப்பாண வடக்கு காரைநகர் கடற்பரப்புக்குள் தலைமையதிபதியால் வழங்கப்படும்

வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் தொடர்பிலான அனுமதிப்பத்திரம் இல்லாது கடல்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை ,மேற்கூறிய அனுமதி பத்திரம் இன்றி இலங்கைநீர்பரப்புஎல்லைக்குள் நுழைந்து மீன்பிடி வலை, படகு நிற்கின்ற வரைக்கும் தொடக்கறுத்து வைக்காமை ,

காரைநகர் கடற்பரப்புக்குள் வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமை ,போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு நீரியல் வளத்துறையினரால் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக 20 படகுகளுடன் 141 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# எல்லை கணக்கீடு செய்ய கோரி புதுப்பட்டினம் மீனவ கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்



**செங்கல்பட்டு, ஏப்.13:** செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே புதுப்பட்டினம் மீனவர் பகுதி, வாயலூர் உயாலிகுப்பம் மீனவர் பகுதி அடுத்தடுத்து உள்ளன. 2 பகுதிகளின் எல்லை எந்த மீனவர் பகுதிக்கு உரியது என பிரச்சனை இருந்து வருகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் 15-ந்தேதி 2 கிராமங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் மயான கொள்ளை விழா நிறுத்தப்பட்டது. இதில் இரு தரப்பு, மீனவர்களும் கைது செய்யப்பட்டதால் கடந்த 2 மாத காலமாக மீனவர்கள் மற்ற கைதுக்கு பயந்து தலைமறைவாக இருந்தனர்.

இந்த நிலையில் தற்போது கைதான மீனவர்கள் ஜாமீன் பெற்று வெளியே வந்து உள்ளனர்.

இந்நிலையில் இந்த மீனவர் பகுதியில் தங்கள் பகுதி எதுவரை வருகிறது என அதிகாரிகள் கணக்கீடு செய்து பெயர் பலகை வைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதை வலியுறுத்தி இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என கூறி இன்று காலை புதுப்பட்டினம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 800-க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கடற்கரையில் அமர்ந்து கைகளில் கருப்பு கொடி ஏந்தி போராட்டம் நடத்தினர்.

இதனால் புதுப்பட்டினம் மீனவர்கள் இன்று மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. தங்கள் கோரிக்கை நிறைவேறாவிட்டால் வரும் சட்டமன்ற தேர்தலை புறக்கணிக்க போவதாக மீனவர்கள் அறிவித்தனர். இந்த போராட்டம் காரணமாக அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.




# ஒரே விமானத்தில் செல்ல இருந்த பழனிசாமி, உதயநிதி: கடைசி நேரத்தில் திடீர் மாற்றம்



**சென்னை, ஏப்.13:** அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் ஒரே விமானத்தில் சென்னையில் இருந்து திருச்சி செல்ல இருந்த நிலையில், கடைசி நேரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பதற்காக, சென்னையில் இருந்து நேற்று நண்பகல் 12.40 மணிக்கு திருச்சிக்கு கிளம்பும் பயணிகள் விமானத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி செல்ல இருந்தார். அதே விமானத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார்.

கடந்த சில நாட்களாக தேர்தல் பிரச்சாரத்தின்போது பழனிசாமி, உதயநிதி ஸ்டாலின் இடையே கடுமையான வார்த்தைப் போர் நிலவி வரும் நிலையில், இருவரும் ஒரே விமானத்தில் பயணம் செய்ய இருந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், கடைசி நேரத்தில் தனது பயணத்தை ரத்து செய்த உதயநிதி ஸ்டாலின், பிற்பகலில் தனி விமானத்தில் சென்றார். அதேநேரம் திட்டமிட்டபடி அதே விமானத்தில் பழனிசாமி திருச்சிக்கு பயணம் செய்தார்.

# திருப்பத்தூர் தொகுதி: 20 ஆண்டுகால அரசியல் பயணமும் தீராத குடிநீர் தாகமும்

**சென்னை, ஏப்.13:** தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:-

தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு, வளர்ச்சியடைந்த பாரதத்திற்கு, வளர்ச்சியடைந்த தமிழகம் தேவை என்ற கொள்கையோடு 2026 தமிழக சட்டமன்ற தேர்தல் களத்தில் பணியாற்றி வரும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிடும் நமது வெற்றி வேட்பாளர், தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் அண்ணன் கே.சி. திருமாறன் அவர்களை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினேன்.

திருப்பத்தூர் தொகுதியில் 2006 ஆம் ஆண்டு முதல் 20 ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தும் தொகுதியின் வளர்ச்சிக்காக எதுவும் செய்ய வக்கற்ற ஒரு சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருக்கிறார் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள். இப்பகுதியில் நிலவும் குடிநீர் பஞ்சத்தை போக்க திமுக அரசும் அமைச்சர் பெரியகருப்பனும் என்ன செய்தார்கள்?

எனினும், நமது மத்திய பாஜக அரசு சார்பில் திருப்பத்தூர் தொகுதியில் இரண்டு இடங்களில் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தினார்கள். ஆனால், அதையும் தடுத்து பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கவிடாமல் செய்துள்ளனர். அதற்கு காரணம், கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களின் மனைவி பெயரில் கிரிஷ் ஆக்வா எனும் தண்ணீர் கம்பெனி வைத்திருப்பது தான்.

தனது குடும்பத்தின் நிறுவனம் வளரவேண்டும் என்பதற்காக, பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க, மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகம் சார்பில் அமைக்கப்பட்ட குடிநீர் ஏடிஎம் திட்டத்தை முடக்கியுள்ளனர். இப்படி சுயநலமிக்க மோசமான திமுக கும்பலிடம் இருந்து திருப்பத்தூர் தொகுதியை நாம் பாதுகாக்க வேண்டும்.

இந்தியாவிலேயே ரயில் பாதை இல்லாத ஒரே சட்டமன்ற தொகுதி திருப்பத்தூர் தான். இத்தனை ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருக்கும் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் அதற்காக ஒருமுறையாவது கோரிக்கை வைத்திருக்கிறாரா? ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறாரா? நான் திருப்பத்தூர் மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.

நமது வெற்றி வேட்பாளர் கே.சி. திருமாறன் அவர்கள் வெற்றி பெற்ற பிறகு, அந்த வெற்றி விழாவில் நமது மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேரடியாக வருவார். திருப்பத்தூர் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறும். வளர்ச்சியடைந்த திருப்பத்தூர் தொகுதி உருவாகும்.

அதை நடத்திக்காட்ட வேண்டும் என்றால், திருப்பத்தூர் மக்கள் அனைவரும் ஒருசேர நமது தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வேட்பாளர் கே.சி. திருமாறன் அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையட்டும்! திருப்பத்தூர் தொகுதிக்கு வளர்ச்சி கிடைக்கட்டும்!

இவ்வாறு அதில் தெரிவித்தார்.

# த.வெ.க. பிரசாரத்துக்கு இரட்டை இலைக்கு ஓட்டு கேட்ட செங்கோட்டையன்

**ஈரோடு, ஏப்.13:** ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றிக்கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து செங்கோட்டையன் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது செங்கோட்டையன் பொதுமக்கள் மத்தியில் பேசியதாவது:-

எடப்பாடி பழனிசாமிக்கு ஓட்டு போட்டால் அது நோட்டாவாக மாறிவிடும் என தெரிவித்து பேசிக்கொண்டிருந்தார். இறுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களியுங்கள் என்று வாய் தவறி கூறினார். பின்னர் திடீரென சுதாரித்துக் கொண்டு இரட்டை இலை சின்னத்தை நான் கேட்டு கேட்டே பழகி விட்டேன் எனவும், ஒரு மூதாட்டி தான் கோபி செட்டிபாளையத்தில் வாக்கு சேகரிக்க செல்லும் பொழுது உங்களுக்குத்தானே எப்பொழுதும் வாக்களிப்போம் இரட்டை இலை சின்னம் தானே என கூறினார் .

ஆனால், நான் தற்போது விசில் சின்னத்தில் போட்டியிடுகின்றேன் எனக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டேன். அவரும் அதற்கு நிச்சயம் உங்களுக்கு தான் எனது வாக்கு என்று கூறியதாக கூறி சமாளித்து, பேசினார். செங்கோட்டையனின் இந்த பேச்சால் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM